கூடாது. (குறுக்கிடு) நீங்கள் எப்பொழுதுமே இப்படி வாடிக்கையாக வைத்துக்கொள்ளக்கூடாது. (குறுக்கீடு) உட்காருங்கள் எல்லோரும் உட்காருகிறார்கள், நீங்கள் மட்டும் உட்காரவில்லையென்றால் அது தப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு.குமாரதாஸ், உட்காருங்கள். (குறுக்கீடு)

விவாதம் முடிவுற்றது. அடுத்த கட்டத்திற்குப் போய் திருத்தங்கள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன.

''1992 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''

என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. தென்னவன் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 10–2–1992, திங்கட்கிழமை முற்பகல் 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

60. சேரன் பொறியியற் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

61. அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

62. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1990-91-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

63. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

64. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

65. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

66. இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் 1990-91ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

67. தளபதி அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் (தற்போது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று மாற்றப்பட்டது) 1990—91-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

68. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1990—91ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

69. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1990—91-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).